**வருகின்ற 2019-ம் ஆண்டு ஜூன் மாதம் 28 -ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திரு.A.ஜஹாங்கீர் பாஷா, பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1.2019-2020 ஆம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், கணினி டோனர்கள் வாங்கிக் கொள்வதற்கு உத்தேச செலவினம் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண். 95, நாள்: 28.02.2019-ல் நகர்மன்றம் ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ளது. மீதித் தொகை ரூ. 2,55,252/- இருப்பில் உள்ளது.

மேலும் நடப்பாண்டில் இதுவரை 2,44,748 செலவு மேற்கொள்ளப்பட்டது. தற்போது தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடம் இருந்து தொகை ரூ.6,41,640/-க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே 2019-2020 ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச கூடுதல் செலவினம் தொகை ரூ. 8.00 இலட்சத்திற்கு பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கூடுதல் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.236/2019/டி2)

2. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய இரண்டு சக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 30.06.2019-ல் முடிவடைவதால் மேற்படி இனத்திற்கு 18.06.2019-ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலம் கோர எவரும் வரவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டது.

| வ. எண். | பெயர்/ முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.எஸ் பிரபு த/பெ. சுப்பிரமணி,<br>115, வர்ணபுரம் 5வது ரோடு, பவானி. | ரூ.4,75,000/- |
| 2 | திரு.கே.ராஜசேகரன், த/பெ.ஆர்.கந்தசாமி,<br>17, கருப்பமூப்பனூர்,<br>குறிச்சி, பவானி. | ரூ. 5,00,000/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே.ராஜசேகரன், என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ. 5,00,000/-க்கு கோரியுள்ளார். மேற்படியாருக்கு 01.07.2019 லிருந்து மூன்று ஆண்டுகளுக்கு (01.07.2019 முதல் 30.06.2022) வரை புதிய பேருந்து நிலைய இரு சக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு நுழைவு கட்டணம் வசூலிக்க உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு சுங்க கட்டணம் வசூல் செய்வதற்குரிய நிபந்தனைகள் பின் வருமாறு.

உரிமக்காலம் 01.07.2019 முதல் 30.06.2022 வரை

1.சைக்கிள் நாள்ஒன்றுக்கு கட்டணம் - ரூ. 5.00

2. இரண்டு சக்கரமோட்டார் வாகனங்கள் - ரூ. 10.00

1. நடை பாதைகளிலோ, சாலைகளிலோ மிதிவண்டிகளையும், இருசக்கர வாகனங்களையும் நிறுத்தக்கூடாது.
2. உரிமதாரர் இரு சக்கரவாகனங்களுக்கு நகர் மன்றத்தால் நிர்ணயம் செய்யும் கட்டணங்களை மட்டுமே வசூலிக்க வேண்டும். கூடுதலாக வசூல் செய்யக்கூடாது அவ்வாறு கூடுதலாக வசூல் செய்வது தெரிந்தால் ஏல உரிமை இனம் ரத்து செய்வதுடன் தண்டத் தொகையையும் சேர்த்து வசூல் செய்யப்படும்.
3. ஒரு நாள் காலம் என்பது காலை 6 மணிமுதல் மறுநாள் காலை 6 மணி வரை ஆகும். மிதிவண்டி நிலையத்தில் நிறுத்தப்படும் மிதிவண்டிகள் மற்றும் இருசக்கர வாகனங்களுக்கு மட்டுமே உரிமக்கட்டணம் வசூலிக்க வேண்டும். பேருந்து நிலையத்திற்குள் வரும் வண்டிகளுக்கு கட்டணம் வசூல் செய்யக்கூடாது.
4. ஏல உரிமதாரர் தான் வசூல் செய்யும் கட்டணங்களுக்குரிய அச்சடிக்கப்பட்ட ரசீதுகளை நகராட்சிகள் முத்திரையிட்டு வழங்க வேண்டும்.
5. நுழைவு வாயில் வசூல் செய்யும் கட்டண விகிதங்களைக் குறித்த அறிவிப்பு பலகையை உரிமதாரர் தனது சொந்த செலவில் தயார் செய்து நுழைவுவாயில் அருகே வைக்க வேண்டும்.
6. ஏல உரிம சொத்து நகராட்சியால் எந்த நிலையில் ஒப்படைக்கப்படுகிறதோ அதே நிலையில் வைத்து அதை பாதுகாத்து உரிமகாலம் முடிவடைந்தவுடன் நல்ல நிலையில் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
7. ஆணையர் அவர்களின் முன்அனுமதியின்றி ஏல உரிம இடத்தில் அதைச்சுற்றிலும் மறைப்புகள், தட்டிகள் வெயில்பந்தல்கள் ஆகியவற்றை ஏல உரிமதாரர் தானே அமைத்துக் கொள்ளகூடாது.
8. ஏல உரிமதாரர் மின் இணைப்பிற்குரிய மின்கட்டணங்களை தனது சொந்த பொறுப்பில் மின் வாரியத்திற்கு நேரிடையாக செலுத்திக் கொள்ள வேண்டியது.

9. மிதிவண்டி நிலையத்தை 24 மணி நேரமும் திறந்து வைத்திருக்க வேண்டும்.
10. ஏல உரிம இனத்திற்குரிய இடத்தில் நிறுத்தப்படும் இருசக்கர வாகனங்கள் மற்றும் மிதிவண்டிகள் காணாமல் போனால் இதற்கு நகராட்சி பொறுப்பேற்காது.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1707/2018/அ2)

3. பவானி நகராட்சியில் கணிணியின் மூலம் புதியமுறையில் அனைத்து அலுவலக நிர்வாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், புள்ளிவிபர தொகுப்பாளர் பணியிடம் இல்லாத காரணத்தினால் தினசரி கணிணி (CWBS) மூலம் பணிகள் தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது மேற்படி ஒப்பந்தக்காலம் 30.6.2019 உடன் முடிவடைந்ததால் 1.7.2019 முதல் 30.6.2020 வரை ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) பணிகளை மேற்கொள்ள 19.6.2019-ம் தேதி மாவட்ட ஆட்சியரின் விலைவிகிதத்தின் அடிப்படையில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1 | Interfaces, Techanlogies, Salem | 595.00 |
| 2 | 1 to 9 IT Infrastructure Erode . | 599.00 |
| 3 | Gold Soft Computers, Kumarapalayam | 572.00 |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான (நாள் ஒன்றுக்கு ரூ.572/-) விலைப்புள்ளி வழங்கிய M/s.Gold Soft Computers, Kumarapalayam அவர்களின் மூலம் தினசரி பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:
1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. 01.07.2019 முதல் பணிமேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.804/2016/இ1)

4. பவானி நகராட்சியில் கணிணியின் மூலம் தினசரி E-mail, எடுக்கவும் அனுப்பவும் மேலும் அனைத்து அலுவலக நிர்வாக பணிகனை கணிணி மூலம் தட்டச்சு செய்யும் பணி மேற்கொள்ள தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ள காரணத்தினால் தினசரி கணிணியில் பணிகள் தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது மேற்படி ஒப்பந்தக்காலம் 30.6.2019 உடன் முடிவடைந்ததால் 1.7.2019 முதல் 30.6.2020 வரை ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) பணிகளை மேற்கொள்ள 19.6.2019-ம் தேதி மாவட்ட ஆட்சியரின் விலைவிகிதத்தின் அடிப்படையில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1 | Interfaces, Technologies, Salem | 475.00 |
| 2 | 1 to 9 IT Infrastructure Erode . | 495.00 |
| 3 | Gold Soft Computers, Kumarapalayam | 462.00 |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான (நாள் ஒன்றுக்கு ரூ.462/-) விலைப்புள்ளி வழங்கிய M/s.Gold Soft Computers, Kumarapalayam அவர்களின் மூலம் தினசரி பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2) 01.07.2019 முதல் பணிமேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.865/2016/இ1)

5. பவானி நகராட்சியில் பணியாற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஓய்வுப்பெற்றோர், பணி மாறுதல் ஆகி சென்றவர்கள் மற்றும் இறந்தவர்களின் சேமநல நிதி கணக்கில் உள்ள தொகைக்கு வட்டித் தொகை 2000 - 2001 முதல் 2017-2018 வரை உள்ள காலங்களுக்கும், 6வது ஊதியக்குழு நிலுவை வட்டித் தொகை கணக்கிடவும் 04.06.2019-ல் அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் விலைப்புள்ளி கொடுத்துள்ளார்கள்.

<table>
<tr><th rowspan="2">வ.எண்.</th><th rowspan="2">நிறுவனங்களின் பெயர்</th><th colspan="3">பணியின் பெயர்</th></tr>
<tr><th>சேமநலநிதி கணக்கிற்கு தனிநபர் ஒருவருக்கு</th><th>வட்டி கணக்கிட அறிக்கை விபரம் ( நிலுவை)</th><th>6வது ஊதியக்குழு நிலுவை வட்டி கணக்கிட்ட அறிக்கை</th></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Gold Soft Computers, Shop No. 2 Komarapalayam | ரூ.30/- | ரூ.1000/- | ரூ.1000/- |
| 2 | Yours Net, Bhavani | ரூ.40/- | ரூ.1000/- | ரூ.1000/- |
| 3 | AVR Computers, Bhavani | ரூ.45/- | ரூ.1000/- | ரூ.1000/- |

மேற்கண்ட பணிகளில் 1,2,3 ஆகியவற்றில் வரிசை எண். 1-இல் உள்ள கோல்டு சாப்ட் கம்யூட்டர்ஸ், குமாரபாளையம் நிறுவனமே குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளனர். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கோல்டு சாப்ட் கம்யூட்டர்ஸ் குமாரபாளையம் நிறுவனத்திற்கு பணியை வழங்கவும் அதற்கான தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். /2019/ எச்1)

6. இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை கொள்கை திட்டச்செயலாக்கம் ( Action Plan ) மற்றும் ஒருமுறை பயன்படுத்தி எறியப்படும் பிளாஸ்டிக் அபராதம் குறித்தும் ஈரோடு மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடாக வெளியிட மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு அவர்களால் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி பணிக்கு அரசு கருவூலத்தில் தொகை செலுத்த வேண்டியுள்ளது. பக்கம் ஒன்றிற்கு 2100 வீதம் பன்னிரெண்டு பக்கங்களுக்கு 12 x 2100 = 25200/- ஐ அரசு கணக்கு தலைப்பில் வங்கியில் செலுத்தப்பட வேண்டும்.

‘ 005800 Stationery and printing 200
Other press receipts - AP.cost of
Printing work done for other govt
Departments 005800200AA0002”

மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1036/2019/எச்1)

7. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டசபையில் 110விதியின் கீழ் தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு ரூ.2000/- நிதியுதவி வழங்கப்படும் என அறிவித்து உள்ளதால் இந்நகராட்சியின் பகுதியில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியல்படி களப்பணிக்கு சென்று அக்குடும்பங்களின் ஆதார் எண், ஸ்மார்ட் கார்டு எண், மற்றும் வங்கி கணக்கு எண் போன்றவற்றை DBC பணியாளர்கள் மற்றும் பரப்புரையாளர்களை கொண்டு விபரங்களை பெற வேண்டி உள்ளது.

அவ்வாறு கணக்கெடுப்பின் மூலம் பெறப்படும் ஆதார் எண், ஸ்மார்ட் கார்டு எண் மற்றும் வங்கி கணக்கு எண் போன்ற கூடுதல் விபரங்களை தினமும் Online-ல் TamilNadu Urban Date Web site-ல் பதிவேற்றம் செய்ய வேண்டி உள்ளதால் இந்நகராட்சியில் புள்ளி விபர தொகுப்பாளர் பணியிடம் காலியாக உள்ளதால் வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் புள்ளி விபர தொகுப்பாளர்களை உள்ளுர் கணினி நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (ந..கஎண்.706/2019/எச்1)

8. பவானி நகராட்சியில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு ரூ.2000/- நிதியுதவி வழங்கிட, கணக்கெடுக்கப்பட்ட விபரங்களை ஆதார் எண், வங்கி கணக்கு எண் மற்றும் ஸ்மார்ட் கார்டு எண் போன்ற விபரங்களை கணினி இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு மூலம் அலுவலக பணிகளை மேற்கொள்ளவும் 10.06.2019ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளியின் விபரம்:**

**<u>பணி எண்:1</u>**

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு விண்ணப்பத்தினை இணையத்தில் பதிவேற்றம் செய்தல் விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 | கோல்டு சாப்ட் கம்ப்யூட்டர், குமாரபாளையம் | ரூ.5/- |
| 2. | யுவ்ரஸ் நெட், மெயின்ரோடு, பவானி | ரூ.10/- |
| 3. | ஏ.வி.ஆர்.கம்யூட்டர்ஸ், பவானி | ரூ.12/- |

**அலுவலகக்குறிப்பு:**

1. பணி எண் 1-ன்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்1ல் கண்டுள்ள M/S கோல்டு சாப்ட் கம்ப்யூட்டர்ஸ், குமாராபாளையம் அவர்களின் விலைப்புள்ளி மற்ற இரண்டை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி பணி எண்:1 M/s. கோல்டு சாப்ட் கம்ப்யூட்டர்ஸ், குமாராபாளையம் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கரிக்கலாம்.

(ந.க.எண்.706/2019/எச்1)

9) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் வாகனம் TN36AL4167 மினி ஆட்டோ வாகனத்தின் company ஆயில் சர்வீஸ் ஜூலை-2019 ஆம் மாதத்தில் TATA நிறுவனத்தின் பணிமனையில் மேற்கொள்ள வேண்டி உள்ளது.

எனவே மேற்படி வாகனத்தினை TATA motors -ன் Excell Auto Service 578 நசியனுார் ரோடு ஈரோடு -11 பணிமனையில் முதல் சர்வீஸ் செய்து கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.821/2019/எச்1)

10) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN36D4020 வாகனத்தின் தகுதிசான்று புதுப்பிக்க வாகனத்தின் இருபுறமும் Grill வைத்து விபத்து தடுக்கும் வகையில் பொருத்த வேண்டி உள்ளது. மேலும் வாகனத்தின் பின்புறம் மற்றொரு வாகனம் மோதும் போது விபத்து ஏற்படுவதை தடுக்க பின்புறம் பம்பர் பொருத்தி வாகனத்திற்கு தகுதிசான்று புதுப்பிக்க வேண்டி உள்ளது. Grill 5 ½ x 2 ½ சைசில் இருபுறமும் பின்புறம் பம்பர் 6 அடி சைசில் பொருத்துவதற்கு ஆகும் செலவினம் 4900/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.820/2019/எச்1)

11) பவானி நகராட்சியின் திட்டப்பணிகள் சம்பந்தமான பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் போன்றவை நாளிதழில் விளம்பரம் செய்த விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | நாளிதழ் விபரம் | விளம்பர விபரம் | பட்டியல் எண் , நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | "தினசூரியன்" மதுரை | CGF மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 840/2018/இ1 | BillNo.1484 நாள்: 29.08.2018 | 14,616 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாள்: 27.8.2018 | | |
| 2 | "தினசூரியன்" மதுரை | SBM - SWB 2018-19 053/2019/இ1 நாள்: 21.01.2019 | BillNo.1685 நாள்: 23.01.2019 | 14,784 |
| 3 | தினபூமி, கோவை | திட்டப்பணிகள் | BillNo.70847 நாள்: 06.03.2019 | 5,250 |

மேற்படி விளம்பர கட்டணத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் நாளிதழ்களுக்கு பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.840/2018/இ1)

12. இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் சேகரிக்கப்படும் கழிவுகளில் மக்கும் தன்மை கொண்ட 6.5 MT கழிவுகள் தினமும் தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு பவானி நகராட்சியின் நுண் உரக்கூடத்தில் உரம் தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி உரம் தயார் செய்யும் மையத்தில் ( mcc) பல்வரைசர் மிஷினில் அறைத்து தூளாக்கப்பட்ட மக்கும் குப்பைகள் தொட்டியில் நிரப்பி உரம் தயார் செய்ய ஏதுவாக அறைத்து துளாக்கப்பட்ட குப்பைகளை பிளாட்பாரத்திலிருந்து தொட்டியில் நிரப்புவதற்கு எடுத்து செல்ல wheel Barrow கள் மொத்தம் 10 எண்ணிக்கை தேவைப்படுகிறது.

எனவே 10 nos wheel barrow (100 KG கொள்ளளவு கொண்டது) வாங்கி பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். )

13. பவானி நகராட்சி பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் தினமும் சுமார் 6.5 மெ.ட. மக்கும் கழிவுகளும் 3 மெ.ட. மக்காத கழிவுகளும் சேகரிக்கப்பட்டு வருகிறது. மக்கும் கழிவுகளை உரமாக்க 2 எண்ணிக்கை MCC மையமும், உலர் கழிவுகளை மறுசுழற்சிக்கும் மாற்று பொருள் பயன்பாட்டிற்காகவும் பிரித்து அனுப்ப வளமீட்பு மையம் ஒன்றும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதால் மேற்படி மையங்களில் ஒப்பந்த அடிப்படையில் 19 பணியாளர்களை அயற்பணி ஒப்படைப்பு (Outsourcing Basis) முறையில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள ஏற்கனவே நகர்மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்: 11701/2018/G2இ நாள்: 23.07.2018-ல் Unskilled Labour - Mazdoor Category- II-ல் குறிப்பிடப்பட்டுள்ள நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.312/- வீதம் தினக்கூலியாக நிர்ணயம் செய்யப்பட்ட பணியாளர்களை இப்பணிக்கு ஒப்பந்ததாரர் பெற்று பணி மேற்கொள்ளவும், நாள் ஒன்றுக்கு 19 பணியாளர்களை 130 நாட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி அயற்பணி ஒப்படைப்பு (Outsourcing Basis) முறையில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இதற்கு கீழ்காணும் முறையில் செலவினம் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | விபரம் | தொகை<br>(ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.312/- வீதம் 130 வேலை நாட்களுக்கு **312 X 19 X 127** | **770640** |
| | ESI 3.25% | **25046** |
| | EPF 13.00% | **100183** |
| 2 | Administrative charges 5% | **38,532** |
| 3 | General Insurance 19*1000 | **18,000** |
| 4 | Safety Measures (1250*18) | **22,500** |
| 5 | Uniforms (1250*19) | **23,750** |
| | **Total** | **998651** |
| | **Rounded off** | **999000** |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள் கடித ந.க.எண்: 1819/2016/எல்3, நாள்: 08.11.2016 ன் படி EPF and MP Act 1952-ற்கு இணங்கிட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்கண்டுள்ள விபரப்படி பணியாளர்களுக்கு EPF and MP Act 1952 ESI Act 1948- ன் படி மேற்கண்டவாறு செலவினம் கணக்கிடப்படுகிறது. எனவே, 02.08.2019 முதல் 130 வேலை நாட்களுக்கு மேற்காணும் செலவினத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி அயற்பணி ஒப்படைப்பு (Outsourcing Basis) முறையில் பணிமேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். )

14. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நதி நீரில் கழிவு நீர் கலந்து மாசு ஏற்படுவதினை தடுக்கும் பொருட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க தேவையான வரைபடங்களை Auto Cadd -ல் வரைந்து கொடுக்கும் பணி,தொகை ரூ.5000/ க்கு தனி அலுவலர் அவர்கள் 14.06.2019 அன்று முன் அனுமதி வழங்கியதன் பேரில் 18.06.19 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின்

ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | திரு. எஸ். பாலசுப்பிரமணியன் அவர்களின் விலை | திரு.எம்.அப்புசாமி அவர்களின் விலை | திரு.பி.ஏ.செல்லப்பன் அவர்களின் விலை |
|---|---|---|---|---|
| 1 | Auto Cadd மூலம் Drawing வரைந்து கொடுக்க | ரூ.600/-hr | ரூ.650/- hr | ரூ. 700/- hr |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ். பாலசுப்பிரமணியன் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. பொது நிதி 2019-20 -ல் செலவை மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதையும், குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ். பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 789/2019/இ1)

15. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நதி நீரில் கழிவு நீர் கலந்து மாசு ஏற்படுவதினை தடுக்கும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க தேவையான வரைபடங்களை பல்வேறு அளவுகளில் colour printout எடுத்து கொடுக்கும் பணி, தொகை ரூ.5000/- க்கு தனி அலுவலர் அவர்கள் 14.06.19 அன்று முன் அனுமதி வழங்கியதன் பேரில் 18.06.19 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | திரு. எஸ். பாலசுப்பிரமணியன் அவர்களின் விலை | திரு.எம்.அப்புசாமி அவர்களின் விலை | திரு.பி.ஏ.செல்லப்பன் அவர்களின் விலை |
|---|---|---|---|---|
| 1 | $A_0$ Size Colour Print out | ரூ.1300/-e | ரூ.1420/-e | ரூ. 1450/-e |
| 2 | $A_1$Size Colour Print out | ரூ.700/-e | ரூ.750/-e | ரூ. 770/-e |
| 3 | $A_2$Size Colour Print out | ரூ.400/-e | ரூ.420/-e | ரூ. 450/-e |
| 4 | $A_3$Size Colour Print out | ரூ.120/-e | ரூ.130/-e | ரூ. 140/-e |
| 5 | Spiral binding | ரூ.70/-e | ரூ.75/-e | ரூ. 80/-e |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண். 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. பொது நிதி 2019-20 -ல் செலவை மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதையும் அனைத்து இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.
789/2019/இ1)

16. பவானி நகராட்சியில் DAY -NULM 2017-18 திட்டத்தின் கீழ் 49.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மருத்துவமணை வளாகத்தில் உட்புற நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் அறை ( Special Shelter) கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 38038/2013/UPA-2 நாள்: 31.10.2018-ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மண்டல செயற்பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரகம் திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2217/2014/பி1 நாள்: 06.03.2018-ல் தொழில் நுட்ப அனுமதி பெற்று 20.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி 23.4.18-ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது. வரைபடத்திற்கு Structural Design அரசு பொறியியல் கல்லூரி சேலம், அவர்களின் கடித ந.க.எண். சி-195/GCE/SLM/ CIVIL/SOIL/ LAB நாள்:04.05.2018 அன்று பெறப்பட்டது. இந்நிலையில் அரசு மருத்துவமணை அதிகாரிகள் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் கட்டப்படும் கட்டிடத்தின் ஆக்கிரமிப்பு பரப்பளவை குறைக்கும் நோக்கில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய அறைகள் கட்டுமாறு அறிவுறுத்தினார்கள் அதன் அடிப்படையில் வரைபடம் ( PLAN) தயாரிக்கப்பட்டு துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், அலுவலகம், சேலம் அவர்களின் கடிதம் எண். 6054/2018-SR -3 நாள்: 18.03.2019 அன்று DTCP அனுமதி பெறப்பட்டது. அனுமதி பெறப்பட்ட Plan க்கு Structural Design ( வடிவமைப்பு) IRTT கல்லூரி, ஈரோடு அவர்களிடம் 27.6.2019 அன்று பெறப்பட்டு Working Estimate தயாரிக்கப்பட்டுள்ளது. Working Estimate மண்டல செயற்பொறியாளர் திருப்பூர் அவர்களிடம் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1333/2014/இ1)